J.M.C.N.

விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 30 வெள்ளிக்கிழமை (13.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 115




## ஏறாவூரில் சூடு இளைஞன் பலி

(மட்டக்களப்பு)

ஏறாவூர் குடியிருப்பு கலைமகள் பாடசாலை வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளம் முஸ்லிம் குடும்பஸ்தர் ஒருவர் பலியானதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

குடியிருப்பு கலைமகள் பாடசாலை வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அபுல் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தைப் பாதையை திறப்பதற்கு பாதுகாப்பு உத்தரவாதம் தேவை

### செஞ்சிலுவைச் சங்கம் கோரிக்கை

(வவுனியா)

வவுனியாவில் ஓமந்தைப் போக்குவரத்துப் பாதைக்கு அண்மையில் இடம் பெற்று வரும் கடும் மோதல்களினால் மக்களின் போக்குவரத்து நுழைவுப் பாதை கடந்த 2 நாட்களாக மூடப்பட்டிருக்கின்றது. இப்பாதையை மீண்டும் திறப்பதற்கு அரசாங்கம் மற்றும் விடுதலைப்புலிகளிடம் இருந்து தமக்கு பாதுகாப்பு உத்தரவாதங்கள் அளிக்கப்பட வேண்டும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கோரியிருக்கின்றது.

இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பேச்சாளர் தெரிவித்ததாவது, கடந்த புதன்கிழமை (04 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் சடலங்கள் கையளிப்பு

(வவுனியா)

மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட இராணுவத்தினரது சடலங்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இராணுவத் தரப்பிடம் கையளிக்கப்படுவதற்காக நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழுவிடம் தமிழீழ விடுதலைப்புலிகளால் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# ஆயுததாரிகள் சூட்டில் ஏழு சிங்கள மக்கள் பலி

## வவுனியாவில் நேற்று சம்பவம்

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பழைய ஊருவ என்ற சிங்களக் கிராமத்தினுள் நேற்று மாலை 4.30 மணியளவில் புகுந்த ஆயுததாரிகளால் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஏழு பேர் பலியாகினர். கொல்லப்பட்டவர்களில் ஆறு பேர் பெண்களாவர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் மீது அமெரிக்கா குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

விடுதலைப்புலிகள் அமெரிக்காவில் இருந்து இயங்கும் செய்மதி தொலைத்தொடர்பு நிறுவனமான இண்டெல்சாட் நிறுவனத்தின், செயற்கைக் கோளை அனுமதி இன்றி பயன்படுத்தியதாகவும் அதனை தடுக்க தாங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் இண்டெல்சாட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் ஒலிபரப்புச் சமிஞைகளை முறையற்ற வகையில் பயன்படுத்தி இந்த ஒலிபரப்பைச் செய்தார்கள் என்று தெரிந்ததுடன் இந்த ஒலிபரப்புக்களைத் தடுக்க பல தொழில் நுட்ப மாற்று வழிகளை பரிசீலித்து வருவதாகவும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதச் சட்டத்தை பயன்படுத்தி ஊடகங்களை ஒடுக்குவதற்கு அரசு முயற்சி

### மனித உரிமை கண்காணிப்பகம் அறிக்கை

(கொழும்பு)

ஊடகங்களை ஒடுக்குவதற்காக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களை அரசாங்கம் பயன்படுத்துவதாக அமெரிக்காவின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது. மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய ஆய்வு மையத்தின் இயக்குநர் சாம் ஜாரிப் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு;

சிங்கள முன்னணி வார இதழான மௌபிம மற்றும் ஆங்கில வார இதழான ஸ்டான்டர்ட் நியூஸ் (04 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேசத்தை திருப்திப்படுத்தவே போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ளது

### பாதுகாப்புச் செயலர் கருத்து

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கை அர்த்தமற்ற தாகிவிட்டது. அது தற்சமயம் சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதற்காக மாத்திரமே எஞ்சி இருப்பதாக பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். படையினர் கிழக்கில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக பாரிய வெற்றிகளை கண்டுள்ளனர். அத்துடன் வடக்கிலும் அவர்களுக்கு அழுத்தத்தை கொடுத்

## சர்வதேச மன்னிப்புச்சபைக்கு எதிராக ஜே.வி.பி.கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச் சபையும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் எதிர்த்து ஜே.வி.பி.யினர் நேற்று வியாழக்கிழமை காலை கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பியின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் கலந்து

வேண்டும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை தோற்கடிக்க வேண்டும் போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை ஏந்தியவாறும் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளர் புத்ததாஸ் விதா

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கை அர்த்தமற்ற தாகிவிட்டது. அது தற்சமயம் சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதற்காக மாத்திரமே எஞ்சி இருப்பதாக பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். படையினர் கிழக்கில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக பாரிய வெற்றிகளை கண்டுள்ளனர். அத்துடன் வடக்கிலும் அவர்களுக்கு அழுத்தத்தை கொடுத்திருக்கின்றார்கள். சர்வதேசத்தை சந்தோசப்படுத்துவதற்காக தாம் போர் நிறுத்த உடன்படிக்கை அமுலில் இல்லை என கூறப்போவதில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (சு-3)

கொழும்பு கோட்டை புகையிரத நிலையம முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பியின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

சர்வதேச மன்னிப்புச் சபையை விரட்ட எதிராக கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளர் புத்ததாஸ் விதானாச்சி சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கைக்கு எதிராக (04 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டில் நிரந்தர சமாதானத்தை பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க வேண்டும்

## சமாதான செயலகப் பணிப்பாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் செயற்படுகின்றது. ஆனால் விடுதலைப்புலிகள் சமாதான பேச்சுக்கான தமது அர்ப்பணிப்பை நிரூபித்துக்காட்ட வேண்டும்.

எந்த வழியில் அர்ப்பணிப்பை நிரூபித்துக்காட்டவேண்டும் என்பது புலிகளுக்கு தெரியும் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளரும் அரசாங்க சமாதான செயலகத்தின் செயலாளருமான பாலித ஹோகன்ன தெரிவித்தார். போர் நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க தயார் என்று விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளமை குறித்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது;

நாட்டில் கௌவரமான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே மகிந்த சிந்தனையில் குறிப்பிட்டுள்ள விடயமாகும். அதன்படியே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை பேச்சுவார்த்தை மூலம் (04 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையுடன் கூட்டுரோந்து ஒருபோதும் சாத்தியமற்றது

## இந்தியா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை கடற்படையினருடன் இணைந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் சாத்தியம் இந்திய கடற்படைக்கு இல்லை. இவ் விவகாரம் இந்தியத் தரப்பினர் மத்தியில் அதிருப்திநிலையையே தோற்றுவித்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது. இலங்கையுடன் இணைந்து கூட்டு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும் தீர்மானம் எதுவும் உயர் மட்டத்தில் ஏற்பட்டுள்ளதா என்ற கேள்விக்கு தமிழ் நாட்டுக் கடற்படை கொமாண்டர் பிலிப் வென் ஹோல்ட்ரன் பதிலளிக்கையில் கூட்டு ரோந்து விவகாரம் மிகவும் சிக்கலுக்குரியது.

அத்துடன் (04 ஆம் பக்கம் பார்க்க)

எமது பிரதேசத்திற்கு வரும் புதியவர்களுக்கு பிரதேசத்திலுள்ள மிதிவெடி அபாயப் பிரதேசங்கள் பற்றி தெரியப்படுத்துவோம்.

சர்வோதயம் unicef

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

## 143 ஓட்டங்களுடன் சுருண்டது பங்களாதேஷ் போராடி வென்றது இங்கிலாந்து அணி

பங்களாதேஷை போராடி வென்றது இங்கிலாந்து அணி. மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ணக்கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் பாபடொஸில் நடைபெற்ற சூப்பர் 8 ஆட்டத்தில் இங்கிலாந்து– பங்களாதேஷ் அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில்வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, இங்கிலாந்துப் பந்துவீச்சுக் கூட்டணிப் பந்துகளுக்கு நிலைத்து நின்று ஆட முடியாமல் 37.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சகில்புல் ஹசன் ஆட்டமிழக்காமல் இறுதிவரை நிதானமாக துடுப்பெடுத்தாடி 57 ஓட்டங்களை பெற்று கௌரவம் அடைந்தார். பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக மகமூட், பனீசர் ஆகியோர் தலா 3விக்கெட்டுக்களையும் அன்டர்சன் 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 144 ஓட்டங்கள் என்ற இலக்கை இலகுவாக வென்று விடலாம் என்று களமிறங்கிய இங்கிலாந்து அணி, பங்களாதேஷ் அணியின் சிறந்த பந்துவீச்சு,களத்தடுப்பினால்44.5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 147 ஓட்டங்களைப்பெற்று போராடி பெற்றி பெற்றது.

இதில் அணித் தலைவர் மைக்கல்வோன் 30 ஓட்டங்களையும் ஸ்ரோறஸ், ஹோலிம்வூட், பிலின்டொப் ஆகியோர் தலா 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பங்களாதேஷ் அணிசார்பாக ரஸல், ரஷாக் மற்றும் ரபீக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (ச–5)

அனுசரணை:-




## கொட்டாஞ்சேனையில் தேடுதல் 13 தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பு கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பாரிய தேடுதல் நடவடிக்கையின் போது 13 தமிழர்கள் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது விடுதிகள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் இளைஞர்களாவர். இவர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

வெளிநாடு செல்வதற்காகத் தாம் கொழும்பு வந்துள்ளதாகக் கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மிக நீண்டகாலமாகக் கொழும்பில் தங்கியுள்ளதாகவும் கைதுசெய்யப்பட்டவர்களின் அடையாளத்தை உறுதி செய்வதற்கான ஆவணங்களோ வெளிநாடு செல்வதற்கான ஆதாரங்களோ இருக்கவில்லைஎனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு நகரின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காகவே இவ்வாறான திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கும் பொலிஸார், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறியுள்ளனர். (ச)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் சித்தியும் சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் 'விசேட சித்தியும் (ஏ) அல்லது ஆங்கில இலக்கியத்தில் சித்தியும் உடையவர்கள் சுயவிபரத்துடன் ஏப்ரல் 18 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ச)

## பரீட்சை அனுமதி அட்டையை பெற்றுக் கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புக்கள் பீடத்தினால் கல்வியாண்டு 2005/06 இற்குரிய முதலாம் அரையாண்டுப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தங்களுக்குரிய பரீட்சை அனுமதி அட்டை மற்றும் நேரசூசி என்பவற்றை எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் பட்டப்பின் படிப்புகள் பீட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி அறிவித்துள்ளார். (ச)

## தடைதாண்டல் பரீட்சை

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் தரம்I, தரம்II, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களுக்கான திறன் தகைமை காண் தடைதாண்டல் பரீட்சை ஜூன் மாதத்தில் நடாத்தப்படவுள்ளது.

(இது தொடர்பாக இன்று வெளிவரும் வர்த்தமானி அறிவித்தலை வலம்புரி அலுவலகத்தில் பார்வையிடலாம்) (ச)

## அடையாள அட்டை பெற விண்ணப்பிக்கலாம்

போக்குவரத்துத் தடைகள் நடைமுறைப்படுத்தப்படும் நேரங்களில் இந்து சமயக் குருமார்கள் தாமதமின்றி ஆலயங்களுக்குச் செல்வதற்கு வசதியாக விசேட அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகளை பிரதேச செயலர் எடுத்து வருவதால் இதனைப் பெறுவதற்கு முன்வருபவர்கள் உடனடியாக தமது பகுதி கிராமசேவையாளர்களூடாக பிரதேச செயலருடன் தொடர்பு கொள்ளுமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ச)

## மகாபொல பெறும் மாணவர் தொகை இருமடங்காக அதிகரிப்பு

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் மகாபொல திட்டத்திற்கு மாணவர்கள் இரு மடங்காக உள்வாங்கப்படும் அதே வேளை, மகாபொல கண்காட்சிகளையும் சகல மாவட்டங்களிலும் நடத்தவுள்ளதாக விற்பனை அபிவிருத்திக் கூட்டுறவுத் துறை நுகர்வோர் சேவைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.கே.ரட்ணாயக்க தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் முதலாவது மகாபொல கண்காட்சி நுவரெலியா மாவட்டத்தில் தற்போது நடைபெறுகின்றது. இம்முறை மகாபொல திட்டத்தில் 40ஆயிரம் மாணவ மாணவிகள் பயன் பெறுகின்றனர். இத் திட்டத்தில் வருடம் ஒன்றுக்கு 12 ஆயிரம் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். (ச–5)

## சி.வி.கே.சிவஞானத்திற்கு கனடாவில் சிறப்பு விருது



கனடாவிலிருந்து வெளிவரும் 'கனடா உதயன்' பத்திரிகையின் விசேட சர்வதேச சிறப்பு விருது, பல ஆண்டுகள் யாழ். மாநகர சபையில் ஆணையாளராகச் சிறப்புறச் சேவையாற்றிய சி.வி.கே.சிவஞானத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இப் பத்திரிகை வருடா வருடம் கனடாவைச் சேர்ந்த நால்வருக்கும் பிறநாட்டைச் சேர்ந்த இருவருக்கும் சர்வதேச சிறப்பு விருதினை வழங்கி கௌரவித்து வருகின்றது.

இந்த வரிசையில் 2007 ஆம் ஆண்டுக்கான சர்வதேச சிறப்பு விருது இந்தியாவைச்சேர்ந்தஒருவருக்கும் இலங்கையைச் சேர்ந்த ஒருவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இம்முறை இலங்கைச் சேர்ந்தவருக்கான 'சமூக தலைமைத்துவத்திற்கான' சிறப்பு விருது சி.வி.கே.சிவஞானத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. (து–அ)

## தேசியக் கல்வியியற் கல்லூரி 2007 ஆம் ஆண்டுக்கான அனுமதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தேசியக் கல்வியியற் கல்லூரிக்கு 2007 ஆம் ஆண்டுக்கு கணித பாடத்திற்கு தெரிவான மாணவர்களின் விபரம் வருமாறு;

தி.மீனலோஜினி (62ஏ/3, வைமன் றோட், நல்லூர்), பி.அரவிந்தன் (வீமன்புலம்,இமையாணன் தெற்கு), எஸ்.கார்த்திகா (துன்னாலை மேற்கு, பருத்தியடைப்பு), எஸ்.ஏ.சிவநாதன் (பாலக்காடு), கே.சிவராஜா (துங்கனயா றோட், தும்பளை), எஸ்.கஜந்தன் (ஸ்ரீ சண்முகானந்தா ஒழுங்கை,கல்வயல்), எஸ்.சந்திரகாந் (40/2, கலைமகள் வீதி, அரியாலை), எஸ்.ஆர்.கீதவாணி (அல்வாய் கிழக்கு), கே.மனோஜா (சிதம்பரா வீதி, வல்வெட்டித்துறை), பி.நிறைஞ்சினி (கரவெட்டி தெற்கு), ஆர்.துஷாந்தன் (மாலடி ,புலோலி தெற்கு), ரி.நிஷாந்தன் (ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்),எஸ்.சிவகுமார் (55, 4 ஆம் குறுக்குத்தொரு, கொழும்புத் துறை), எஸ்.பகீரதன் (ஏழாலை, வடக்கு),என் . பிரதீபன்( ஒத்தியடி பொலிகண்டி), கே.தாட்சாயினி (மானிப்பாய் வீதி,இணுவில் தெற்கு) , எஸ்.வித்தகன் (தாவளை றோட், வட்டு.கிழக்கு), என்.செந்தூரா (புத்தூர் கிழக்கு), ஆர். துஷ்யந்தி (மகாரம்பைக்குள றோட், வவுனியா), வி.மயூரதன் (சிவன்கோவில் றோட், தம்பிலுவில்). (கு)

## இசைக் கச்சேரி

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் நாளை மாலை 4.30 மணிக்கு விசேட இசைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

இவ்விசைக் கச்சேரியைப் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி சிவாஜினி பத்மராஜா வழங்கவுள்ளார். (ச)

## தோட்டப் பாடசாலை ஆசிரியர் சேவைக் காலம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்ற, கடமையாற்றும் தோட்டப் பாடசாலை ஆசிரியர் சேவைக் காலத்தை உடைய ஆசிரியர்களில் இருவரை மேற்படி சேவைக்காலத்தை ஓய்வூதியக் கழிப்பிற்கு சேர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருந்தால் உரிய தகவல்களுடன் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் வலயக் கல்விப் பணியாளருக்கு விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

## சுருட்டுத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பளம்

(யாழ்ப்பாணம்)

வடமாநில சுருட்டு உற்பத்தியாளர் சங்கத்துடனான கலந்துரையாடலின் போது ஆயிரம் சுருட்டுக்கள் சுற்றுவதற்கு 700 ரூபா என்ற அடிப்படையில் சம்பளம் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இப் புதிய சம்பள நடைமுறை மே மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரவுள்ளது. குறித்த திகதியிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல சுருட்டு உற்பத்தியாளரும் மேற்கூறிய சம்பள அடிப்படையில் தமது ஊழியர்களுக்கு கொடுப்பனவை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

## ஆன்மிக நிகழ்வு

தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமதியின் வெள்ளிக்கிழமை ஆன்மிக நிகழ்வு இன்று காலை10 மணிக்கு தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது. (ச)







உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்பது அன்பாலும் ஒழுக்கத்தாலும் தெய்வ பக்தியாலுந்தான்.

*-சுவாமி இராமதாசர்*

வலம்புரி

# ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தாமல் இருப்பதேன்?

நாளை தமிழ்-சிங்களப் புத்தாண்டு பிறக்கிறது. பிறக்கின்ற புத்தாண்டை இன்முகத்துடன் வரவேற்கும் மன நிலையில் யாழ்.குடாநாட்டு மக்கள் இல்லை.

காணாமல் போனோர், சுட்டுக் கொல்லப்பட்டோர், கடத்தப்பட்டோர் என்ற பட்டியல் புத்தாண்டைத் தமிழ் மக்கள் வரவேற்பதற்குத் தடை விதித்துள்ளது.

இதற்கு அப்பால் பொருள்களின் அதிகூடிய விலை அதிகரிப்பு, வேலையிழப்பு என பொருளாதாரக் கஷ்டங்கள் புத்தாண்டின் சிறப்பிற்கு குந்தகமாக அமைந்து விட்டது.

இவற்றின் மத்தியிலும் சின்னஞ்சிறுசுகளின் மனம் பாதித்துவிடக் கூடாது என்பதற்காக இருக்கின்ற மனச் சுமைகளை ஒருவாறு தாங்கிக் கொண்டு புத்தாண்டை ஓரளவுக்கேனும் அனுஷ்டிக்க நினைத்ததன் அடிப்படையில் யாழ்.நகரம் சுறுசுறுப்படைந்துள்ளது.

யாழ்.நகரம் சுறுசுறுப்படைந்தாலும் வர்த்தகர்கள், நுகர்வோர்களிடையே இருந்த வேகமும் பதற்றமும் மாலை ஐந்து மணிக்கே வர்த்தக நிலையங்களை மூடச் செய்துவிடுகின்றது.

இவ்விதம் மக்கள் அவசரமாகப் பொருள்களைக் கொள்வனவு செய்வதிலும் வாகனங்கள் குறித்த நேரத்திற்கு முன்பாக ஓடித் தப்புவதற்குமான காரணம் ஊடரங்குச் சட்டமாகும்.

மாலை ஏழு மணிமுதல் அமுல்படுத்தப்படுகின்ற ஊரடங்குச் சட்டத்தால் மக்கள் படும் அந்தரத்தையும் அவசரத்தையும் படைத்தரப்பு உணர்ந்து கொண்டிருக்குமா என்பது கேள்விக்குறியே.

ஏனெனில் இலங்கை மண்ணில் தமிழர்கள் ஆளப்படுபவர்களாகவே படைத்தரப்பினரின் மனங்களிலும் விதைக்கப்பட்டுள்ளது.

எனவே தமிழர்களுக்கு என்ன புத்தாண்டு? அவர்கள் ஏன் அதைக் கொண்டாட வேண்டுமென்ற கேள்விகள் படைத்தரப்பிடம் எழுந்திருக்கும்.

அதன் காரணமாகவே இரவு ஏழு மணிமுதல் அமுலுக்கு வரும் ஊரடங்கை ஒருமணிநேரமாவது பின்தள்ளும் மன நிலை ஏற்படவில்லை என்று கருத வேண்டியுள்ளது. இந்த நினைப்பில் நியாயமும் இருக்கவே செய்கிறது.

புத்தாண்டை ஒட்டி நான்கு ஐந்து தினங்களாக மக்கள் யாழ்.நகரில் கூடிய போதிலும் ஊரடங்கில் தளர்வைச் செய்யாத நிலையில் தமிழ் மக்களின் மனங்களில் என்ன உணர்வு ஏற்படும் என்பதை படைத் தரப்பு உட்பட ஆளும் அரசியல்வாதிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சமத்துவம், நீதி, நியாயம் என்பன அடிப்படையான விடயங்களிலிருந்து பிறப்பெடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அங்கு இன ஒற்றுமை, சமய ஒற்றுமை ஏற்பட முடியும்.

இதைவிடுத்து தாம்தாம் நினைத்தபாட்டில் தாம் விரும்பியபடி சில கொண்டாட்டங்களுக்கு ஊரடங்கைத் தளர்த்துவதும் சிலவற்றை ஏனோ தானோ என்ற விடுபோக்கில் தட்டிக் கழிப்பதும் இனத்துவ ஒற்றுமைக்கு ஆரோக்கியமானதல்ல.

# புதுவருட சம்பிரதாயங்களின் இருப்பு தேசத்தின் ஒற்றுமைக்கு வழி சமைக்கும்

## வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

புதுவருட சம்பிரதாயங்களின் இருப்பானது தேசத்தின் ஒற்றுமைக்கு காரணமாக அமையும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மதுபோதைகளின்றி புதுவருடத்தைக் கொண்டாடுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழ்-சிங்கள புத்தாண்டு அர்த்தமுள்ளதாக மாறுவதற்கு மரம், செடி,கொடிகளால் நிறைந்த சூழலும் நன்மக்களையும் கொண்ட சமூகம் ஒன்றும் இருக்க வேண்டும் என்பது எனது நம்பிக்கையாகும்.

புதுவருடம் குறித்த உணர்வு எமது இதயத்தினுள் எழுவது எம்மைச் சூழவுள்ள மரம், கொடி, செடிகளுடன் கலந்த உணர்வொன்றுடனேயாகும். மரம், கொடி,செடிகள் நிறைந்த சூழலில் இருந்து நாம் தூரமாகும் போது புதுவருடமும் எமது சமூகத்திலிருந்து தூரமாகிறது.

ஆதலால் விவசாயத் தொழிலில் செழிப்புடன் பசுமை நிறைந்த நாடொன்றை உருவாக்குவது புதுவருடத்தை அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கான சிறந்த வழியாகும். புதுவருட சம்பிரதாயங்களின் இருப்பானது தேசத்தின் ஒற்றுமைக்கு காரணமாக அமையும். இப்புதுவருட காலத்தில் பெற்றோர், பிள்ளைகளுக்கிடையே ஏற்படுகின்ற பரஸ்பர உறவானது தேசத்தின் நல்லெண்ணத்தையும் இணைப்பையும் மேன்மையுறச் செய்யும்.

ஆதலால் அதை ஓய்வு நாளாக ஆக்கிக் கொள்வதற்குப் பதிலாக பொதுமக்களுடன் இணைந்துஅச் சம்பிரதாயங்களை நிறைவேற்றுவதை இந்த நாட்டின் மக்கள் தமது தலைவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றார்கள் என்பதையும் நான் அறிவேன்.

எனவேதான் நாம் அனைவரும் ஒன்றாக எவ்வித வேறுபாடுமின்றி புதுவருட சம்பிரதாயங்களை அனுஷ்டிக்க வேண்டியுள்ளது. புதுவருடத்தை மதுபோதைகளின்றி கொண்டாடும்படி நான் அனைத்து மக்களுக்கும் வேண்டுகோள் விடுகின்றேன்.

இந் நாட்டுப் பெண்களினதும் சிறுவர்களினதும் புதுவருட மகிழ்ச்சியை நாம் பாதுகாத்தல் வேண்டும். ஆதலால் தேசியசுதந்திரத்தைக் கூட இழப்பதற்குக் காரணமாக அமைந்த மது போதைகளைத் தவிர்த்து புதுவருடத்தைக் கழிப்பது எதிர்கால சந்ததிக்காக நாம் செய்ய முடியுமான உயர்ந்த தியாகம் என நான் நம்புகின்றேன்.

இப் புதுவருடக் காலத்தில்அரசசேவையில் தம்மை அர்ப்பணித்துள்ள அனைவரையும் குறிப்பாக தேசத்தைப் பாதுகாப்பதற்காக கடமையில் ஈடுபட்டிருக்கும் முப்படையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் அனைவரையும் நாம் நன்றியுடன் நினைவு கூர வேண்டும். (ச)

# மிலேனியம் சவால்களுக்காக நிதியுதவி பெறும் நாடுகளின் பட்டியலிலிருந்து இலங்கை நீக்கம்

## பிரீடம் ஹவுஸ் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் மற்றும் பேச்சுச் சுதந்திரத்திற்கு எதிராக ஒடுக்குமுறைகள் அதிகரித்துச் செல்வதையடுத்து மிலேனியம் சவால்களுக்கான நிதி உதவி பெறும் நாடுகளின் பட்டியலிலிருந்து இலங்கை நீக்கப்பட்டதாக பிரீடன் ஹவுஸ் அமைப்புத் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான ஒப்பந்தம் மற்றும் சமாதான நடவடிக்கைகள் காரணமாக 2004 ஆம் ஆண்டு மிலேனியம் சவால்களுக்கான உதவி பெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கை இணைக்கப்பட்டது.

எனினும் இந்நிலைமைகள் சீர்குலைந்து விடுதலைப் புலிகள் மீண்டும் சிவில் யுத்தத்தின்பால் திரும்பத் தொடங்கியமை மற்றும் அடிப்படை மனித உரிமைகள் மீறும் வகையிலான அரசாங்கத்தின் செயற்பாடுகள் என்பவற்றாலேயே இலங்கையை இப்பட்டியலிலிருந்து நீக்க முடிபு செய்ததாக பிரீடன் ஹவுஸ் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்துத்தெரிவித்துள்ள பிரீடன் ஹவுஸ் அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் ஜெனிபர் வின்ட்சர்;

இலங்கை அரசாங்கத்தின் மனிதஉரிமைகளை மீறும் செயற்பாடுகள் தொடர்பாக சந்தேகம் ஏற்பட்டுள்ளது. நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் ஆட்கள் காணாமல் போகும் சம்பவங்களில் அரசாங்கம் சம்பந்தப்பட்டுள்ளது.

அத்தோடு பேச்சு மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரங்கள் கடும் நெருக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளன. இவை மிலேனியம் சவால்களுக்கான நிதியுதவி பெறுவதற்கான நிபந்தனைகளுக்கு முரணானது.

இவற்றை இலங்கை அரசாங்கம் திருத்திக் கொள்ளும் வரை அந்த நாட்டை நிதியுதவி பெறும் நாடுகளின் பட்டியலில் சேர்ப்பது குறித்துப் பரிசீலிக்க முடியாது. தனிநபர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை மதித்துப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு ஜனநாயக அரசாங்கத்தினதும் கடமையாகும் என தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனைத் தளமாகக் கொண்டு செயற்படும் பிரீடம் ஹவுஸ் அமைப்பானது தர்னார்வத் தொண்டு நிறுவனமாகும். இது ஜனநாயகச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு செயற்படுகின்றது. இதன் கீழ் ஜனநாயக நாடுகள் எதிர்நோக்கும் சவால்களை சமாளிக்க பல்வேறு பிரிவுகளின் கீழ் நிதியுதவி அளித்து வருகின்றது. (ச)

# திருகோணமலையில் துப்பாக்கிச் சூடு கணவன் பலி; மனைவி படுகாயம்

(திருகோணமலை)

திருகோணமலையில் அடையாளம் தெரியாத நபர்களினால் கணவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது மனைவி படுகாயமடைந்துள்ளார். திருகோணமலை வடக்குப் பகுதியில் ஏழு கிலோமீற்றர் தொலைவில் உள்ள சாம்பல் தீவுப் பகுதியில் அத்திமோட்டையில் வீடொன்றில் நேற்றுமுன் தினம் இரவு 8 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்கள் நுழைந்து துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதில் கணவர் உயிரிழந்துள்ளார். அவர் இரு குழந்தைகளின் தந்தையாவார். அவரின் மனைவி படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

# வெள்ளி நற்சிந்தனை 13

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

அறிவூட்டல் என்பது இன்று எமக்கு மிகவும் தேவையாகவுள்ளது. சிறுவர்களை மட்டுமன்றி பெரியவர்களையும் கல்வியின் மூலம் நெறிப்படுத்த வேண்டியுள்ளது. சிறுவர்களை ஆசிரியரும் பெற்றோரும் வழிநடத்தக் கடமைப்பட்டவர்கள்.வீட்டில் பெற்றோர் அப்பணியை ஆற்றுகின்றனர். பாடசாலையில் ஆசிரியர்கள் அப் பணியை செய்கின்றனர்.

இத்தகைய இரு நிலைப் பணிகளும் இன்று முழுமையாக நடைபெறுவதில்லை. சமூக நடப்புக்கள் இதனை வெளிப்படுத்தியுள்ளன. அறிவூட்டல் என்பது சரியானதொரு முறையில் நடைபெற வேண்டும். இல்லாவிடில் அதனால் எவ்வித பயனும் ஏற்படாது.இதனை ஒரு நாலடிப் பாடல் நயமாக விளக்கியுள்ளது. பாடல் சொல்லும் செய்தி எம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

காட்டில் வாழும் குரங்கொன்று மரத்திலிருந்து மழையில் நனைந்து கொண்டிருந்தது. அதைக் கண்டு அந்த மரத்தில் கூடி கட்டி வாழ்ந்து கொண்டிருக்கும் வான்குருவி குரங்கைப் பார்த்து ஓர் அறிவுரை சொல்லியது. 'இந்த மழையில் நனையாதிருக்க என்னைப் போல நீயும் ஒரு கூட்டைக் கட்டிக் கொள்வாய்' அறிவற்ற குரங்கால் இதனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அது தானிருந்த இடத்திலிருந்து பாய்ந்து வந்தது. வான் குருவி அழகாகக் கட்டி வைத்திருந்த கூட்டை பிய்த்தெறிந்தது. பாவம் குருவி. நல்லது சொல்லப் போய் துன்பத்தைச் சந்திக்க நேர்ந்தது.

எனவே நல்லறிவு பெற்றவர்கள், பல நூல்களைக் கற்றவர்கள் இழிதன்மையுடையவருக்கு அறிவுரை செய்யப்புகின் துன்பத்தைச் சந்திக்கவும் நேரிடும். குரங்கு மனம் உடையாரை வழிநடத்துவதில் மிகுந்த பொறுமை வேண்டும்.

பிறர் வாழ்வதற்கு ஏற்ற வழியைக் காட்டுவதில் மிகுந்த கவனம் தேவை. சூழலும் காலமும் ஏற்றதாக அமையாத போது அறிவூட்டல் பயன்தராது. அதனால் வாய்ப்பான சூழல் கண்டு இப்பணி செய்யப்பட வேண்டும். விலங்கு மனமுடையவரைப் பண்படுத்தி அறிவூட்டலைச் செய்ய வேண்டும். இல்லாவிடில் துன்பத்தை அனுபவிக்க நேரிடும். இதனை அனைவரும் மனம்கொள்வது நன்று.

அதனை செய்யுள் வடிவில் நம் முன்னோர் கூறிப் போந்துள்ளனர்.

*'வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்*
*தானொரு நெறி சொலத் தாண்டிப் பிய்த்திடும்*
*ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்*
*ஈனருக்கு உரைத்திடில் இடர தாகுமே'*

*(விவேகசிந்தாமணி-10)*




ஜே.வி.பியால் கொழும்பில் நேற்று மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர்...

# தூத்துக்குடிக்கு அருகே ஆறு சிங்களவர் கைது

(தூத்துக்குடி)

தூத்துக்குடி அருகே இந்தியக் கடல் பகுதியில் சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் படகில் வந்த 6 சிங்களவர்களை கடலோரக் காவல் படையினர் புதன்கிழமை கைது செய்துள்ளனர். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 5 மீனவர்களை நடுக் கடலில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் இவர்களுக்கு தொடர்பு இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. இந்திய கடலோரக் காவல் படையினர் தூத்துக்குடி அருகே ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சந்தேகத்திற்கிடமளிக்கும் வகையில் வந்த படகை மறித்துச் சோதனை இட்டனர். அப் படகில் இலங்கையைச் சேர்ந்த ஆறு பேர் இருந்தனர்.

அவர்கள் ஆறு பேரும் சிங்கள மொழியில் பேசினர். கடலோரக் காவல் படையினர் அவர்களை கைது செய்து தூத்துக்குடி கடற்கரைப் பகுதிக்கு கொண்டு வந்தனர். கைது செய்யப்பட்ட இவர்கள் ஆறு பேருக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்டசம்பவத்தில் தொடர்பு இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

மேலும் இவர்கள் கடல் கொள்ளையர்களாக இருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகள் நடைபெறுகின்றன என தமிழகச் செய்திகள் தெரிவித்தன. (ச-3,5)

# அக்னி ஏவுகணைச் சோதனையை இந்தியா வெற்றிகரமாக முடித்தது

நீண்ட தூரம் சென்று தாக்கும் அக்னி ஏவுகணையை இந்தியா நேற்று வெற்றிகரமாக சோதனை செய்தது. ஒன்பது மாதங்களுக்கு முன்னர் முதன்முறையாக இந்த வகையான அக்னி-3 ஏவுகணைச் சோதனை தோல்வியில் முடிபடைந்தது. இந்த ஏவுகணை 3 ஆயிரம் மீற்றருக்கு மேல் சென்று தாக்கும் வல்லமை கொண்டது.

இது திடீரென மேற்கொள்ளப்பட்ட புது முயற்சி அல்ல என்றும் 1989 ஆம் ஆண்டிலிருந்து இந்த வகையான அக்னி ஏவுகணைகளின் அபிவிருத்தியை இந்தியா தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது எனக் கூறுகிறார் இந்திய பாதுகாப்பு விவகாரங்கள் குறித்த பகுப்பாய்வாளர் கே.சுப்ரமணியன்.

சீனாவிடமும் பாகிஸ்தானிடமும் இந்தியா முழுவதும் சென்று தாக்கக்கூடிய ஏவுகணை வல்லமை உள்ளன என சுட்டிக்காட்டியுள்ள அவர் இந்தியாவின் இந்த ஏவுகணைச் சோதனை இந்தியா மீது அவை தாக்குதல்களை நடத்துவதை தடுக்கும் முகமாக நடத்தப்பட்டது என்றும் இது ஆசிய பிராந்தியத்தில் ஆயுதப் போட்டி எதையும் ஏற்படுத்த வாய்ப்பில்லை எனவும் கூறியுள்ளார்.

இந்த மூன்று நாடுகளிடமும் அணு ஆயுதங்கள் இருப்பதால் இவற்றிடையே போர் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இல்லை எனவும் சுப்ரமணியன் கருத்து வெளியிட்டுள்ளார். (ச-5)

## விடுதலைப்புலிகள்...

இன்டெல்சாட் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு கூறுகின்றது.

இண்டெல்சாட் அதிகாரிகளை அமெரிக்காவுக்கான இலங்கைத்தூதர் பெர்ணாட் குணதிலக ஏப்ரல் 10 ஆம் திகதி அன்று சந்தித்ததையடுத்தே இந்த அறிவிப்பு வந்துள்ளது. (இ)

## இலங்கையுடன் கூட்டுரோந்து...

கூட்டு ரோந்து நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய தேவை இந்திய கடற்படைக்கு இல்லை. இதில் பல்வேறு விடயங்கள் தங்கியுள்ளன என்றார். அத்துடன் இந்த சண்டையில் நாங்கள் எதற்காக பங்கு கொள்ள வேண்டும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து கருத்து வெளியிடுகையில் நாகப்பட்டினம் தொடக்கம் ராமேஸ்வரம் வரையில் கடற்பாதுகாப்பு ராடர்களில் பொருத்த கடற்படை தீர்மானித்துள்ளது. இதன் மூலம் பிராந்தியம் முழுவதையும் கண்காணிக்கக்கூடியதாக இருக்கும் என்றார்.

ராமேஸ்வரம் பகுதியில் நிரந்தர கடற்படைத் தளம் ஒன்றை அமைக்கும் சாத்தியம் குறித்து கேட்டபோது அது குறித்து அராயப்பட்டு வருவதாகக் கூறினார். இதேவேளை தமிழக பிரதம செயலாளர் எல்.கே.திருப்பதியுடன் இது குறித்து அவர்கள் ஆராய்ந்துள்ளதுடன் ராமேஸ்வரம் கடற்படைத் தளத்தை மேலும் தரமுயர்த்துவது குறித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கையில், இந்தியா அமைதி காக்கும் படையினர் நிலைகொண்டிருக்கும் சமயம் ராமேஸ்வரம் கடற்படைத்தளம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கன்னியாகுமரிப் பகுதியில் இந்திய மீனவர்கள் ஐந்து பேர் சுட்டுக்கொல்லப்பட்டமை குறித்து கேட்டபோது அதற்குப் பதிலளித்த கொமண்டர் ஹோல்ட்ரன் அது மிகவும் விசித்திரமானது.

எனினும் அது குறித்து எம்மிடம் போதுமான தகவல்கள் உள்ளன. எனினும் ஒன்றைக் குறிப்பிட்டுக் கூறக் கூடிய அளவு சாட்சியங்கள் இல் லை என்று பதிலளித்தார். (ச-3)


## கேள்வி கோரல்

### போதனா வைத்தியசாலை-மின்சார பராமரிப்பு

மேற்படி விடயம் சம்பந்தமாக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் தினம் 18.04.2007 காலை 10.00 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கேள்விப் பத்திரம் வழங்கும் திகதியும் 16.04.2007 ஆக நீடிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

பணிப்பாளர்,
பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(C-005)


# அமைச்சர் நிமாலின் கருத்துக்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் விசர் நாய்கள் போல் நடந்தால் அவர்களுக்கு விசர் நாய் தடுப்பூசி போட வேண்டும் என அமைச்சரான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்த கருத்துக்கு சுதந்திர ஊடக இயக்கம், ஊடகவியலாளர் தொழிற்சங்கம் என்பன தமது கடும் கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக அவர்களால் விடுக்கப்பட்ட கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; அரசாங்க மருத்துவமனைகளில் சிறப்புச் சலுகைகளைப் பெறுவதற்கு ஏதுவாக அமைச்சரினால் ஊடகத்துறையினருக்கு சிறப்பு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்ட கருத்தும் கண்டனத்திற்குரியது.

சுகாதார சேவைகள் பிரிவில் ஏற்பட்ட சில குறைபாடுகளை சுட்டிக்காட்டியதுடன்தான் எம்மை அவர் விசர்நாய் என அழைத்துள்ளார். ஊடகத்துறையினரும் சாதாரண குடிமக்களே. எனவே அவர்களுக்கு அரசாங்கத்தின் சிறப்புச் சலுகைகள் தேவையில்லை. (ச)

## நாட்டில் நிரந்தர சமாதானத்தை...

அடையவேண்டும் என்றே நாங்கள் கருதுகின்றோம். அரசாங்கம் எப் போதும் பேச்சுவார்த்தை விடயத்தில் பின் வாங்கியதில்லை. கடந்த காலங்களில் அதற்கான அர்ப்பணிப்பை வெளிக்காட்டியே வந்துள்ளது.

சமாதான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது யார் என்று வெறுமனே அறிப்பது முக்கியமல்ல. மாறாக சமாதான பேச்சுக்கான அர்ப்பணிப்பை புலிகள் வெளிக்காட்ட வேண்டும். பேச்சுவார்த்தைக்கான அர்ப்பணிப்பை எந்த வழியில் வெளிப்படுத்த வேண்டும் என்பது விடுதலைப்புலிகளுக்கு தெரிந்த விடயமாகும்.

பேச்சுவார்த்தை மூலம் எட்டப்படும் அரசியல் தீர்வின் மூலமே நிரந்தர சமாதானத்தை அடைய முடியும் என்ற விடயத்தை அரசாங்கம் திடமாக நம்புகின்றது. ஆனால் அரசாங்கம் மட்டும் அர்ப்பணிப்புடன் இருப்பதில் அர்த்தம் இல்லை. (ச)

## சர்வதேச மன்னிப்புச்சபைக்கு...

உலக நாடுகளில் பல்வேறு பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இடம்பெற்றுவரும் மேற்கிந்திய தீவுகளில் இலங்கை கிரிக்கெட் அணிக்கு எதிரான பிரசாரங்களை சர்வதேச மன்னிப்புச் சபை மேற்கொண்டு வருகின்றது.

அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு எதிரான சதித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. தற்போதைய நிலையில் இலங்கை தோல்வியடைந்த நாடு என்று சர்வதேச மட்டத்தில் கூறப்பட்டு வருகின்றது. எனவே இவ்வாறான சர்வதேச சதித்திட்டங்களை முறியடிக்கவே நாங்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றோம் என்றார். (ச-5)

## பயங்கரவாதச் சட்டத்தை...

பேப்பர்ஸ் ஆகியவற்றை வெளி யிடுவதை நிறுத்துவதாக கடந்த மார்ச் 29 ஆம் திகதி ஸ்டான்டர்ட் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்புக்கு 16 நாட்களுக்கு முன்னதாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அந் நிறுவனத்துக்குத் தொடர்பிருப்பதாகக் கூறி அதன் சொத்துக்களை அரசாங்கம் முடக்கியது.

ஊடகங்களை ஒடுக்குவதற்காக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை அரசாங்கம் முறைகேடாகப் பயன்படுத்துகிறது. இலங்கையில் அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளுக்குத் தமிழ் ஊடகங்கள் அடிக்கடி இலக்காகி வரும் நிலையில் 30 ஆண்டுகாலத்தில் முதல் முறையாக ஒரு சிங்கள ஊடகம் மூடப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டுகளில் அரசாங்கத்தின் ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்களை மௌபிம ஊடகம் அம்பலப்படுத்தியது. அதேபோல் காணாமல் போனோர் தொடர்பில் அரசாங்கத்தின் பங்கு குறித்தும் அந்த ஊடகம் கேள்வி எழுப்பியிருக்கிறது.

மௌபிம வார இதழின் மூலமாக தனக்கு எதிராக இரு அமைச்சர்கள் சதித் திட்டம் தீட்டியதாக மகிந்த ராஜபக்ஷ பெப்ரவரி 11 ஆம் திகதி குற்றம் சாட்டியிருந்தார். பெப்ரவரி 13 ஆம் திகதி அந் நிறுவனத்தின் சொத்துக்கள் முடக்கப்பட்டன என மனித உரிமை கண்காணிப்பகம் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## ஓமந்தைப்...

வவுனியாவின் மேற்குப் பகுதி யில் உள்ள பாலமோட்டை பகுதியில் இடம் பெற்ற கடும் மோதலினால் ஓமந்தை போக்கு வரத்துப் பாதை கடந்த 2 நாட்களாக மூடப்பட்டுள்ளது. நேற்றும் இப் பாதை திறக்கப்படவில்லை.

ஓமந்தை மக்களின் போக்குவரத்துப் பாதையை திறப்பதற்கு பாதுகாப்பு உத்தரவாதங்களை கோரி நாங்கள் இரு தரப்புக்களுடனும் பேசி வருகின்றோம் என்றார் அவர். (ச-5)

## ஹொரவுறில்...

ஹூதா அஸ்லம் (வயது 28) என்பவரே இச் சம்பவத்தில் பலியானவராவார். அத்துடன் பாக் ஜாங்கிர் (வயது 18) என்ற இளைஞரே காயமடைந்து வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ச-5)

## ஆயுததாரிகள் சூட்டில்...

வவுனியா மாவட்டம் செட்டிகுளம் பொலிஸ் நிர்வாகப் பிரிவுக்கு உட்பட்ட அவரந்துலாவ பகுதியில் உள்ள பழைய ஊருவ என்ற சிங்கள கிராமத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் புகுந்த ஆயுததாரிகள் 7 பொதுமக்களைக் கொன்று விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்டவர்களில் ஆறு பேர் பெண்கள் என்றும் ஒருவர் ஆண் என்றும் ஊடகத் தகவல் மையம் தகவல் வெளியிட்டுள்ளது.

நேற்று மாலை 4.15 மணியளவில் தமது கிராமத்திற்கு ஆயுதங்களுடன் வந்த அடையாளம் தெரியாத நான்கு பேர் இரு பிரிவுகளாக பிரிந்து வீடுகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இதில் தனது மனைவி, அம்மா, தங்கை, தங்கையின் மகள் ஆகியோர் உட்பட ஆறு பெண்க ளும் 17 வயதுடைய ஒரு இளைஞனும் கொல்லப்பட்டதாக கிராமவாசி ஒருவர் வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியனிடம் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்தில் 13 வயதுக்கும் 85 வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள் கொல்லப்பட்டதாகவும் கொல்லப்பட்டவர்களில் தலை, கால்கள், வயிற்றுப் பகுதி ஆகியவற்றில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த ஏழு சடலங்களும் வவுனியா வைத்தியசாலையின் மருத்துவ பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பழைய ஊருவ என்ற கிராமத்தில் குறைந்த எண்ணிக்கையான குடும்பங்களே வசித்து வருவதாகவும் இந்த குடும்பங்களைச் சேர்ந்த ஆண்கள் அநேகமானோர் ஊர்காவற்படையைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இராணுவத்தினருக்கு உதவியாக விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தலை முறியடித்து கிராமப் பகுதிகளை பாதுகாப்பதற்காக ஊர்காவற்படையின் அணியில் கிராமவாசிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-1,3)


## மலிவு விற்பனை

சாறி வகைகள், பட்டுச்சாறி வகைகள், சல்வார் துணிவகைகள், ஸ்கேட் அன் பிளவுஸ், சிறுவர்களுக்கான ஆடைகள், டெனிம் ரவுசர்கள், சேட் வகைகள், அனைத்தையும் மலிவாகப் பெற்றுக் கொள்ள உடன் விரையுங்கள்.

யாழ்.நகரில் குறைந்த விலையில் நிறைந்த ரகங்கள் நிகரில்லா தரங்களின் அழகிய குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்

கிறின் பலஸ் எம்போறியம்

பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி.

(823)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.